**கொ.மு.சுட்டெண்**

**2022 யூலை**

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

**புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 யூலையில் குறைவடைந்தன**

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2022 யூலையில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் வீழ்ச்சியடைந்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டியது.** அதற்கமைய, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது வழங்குநர்களின் விநியோக நேரம் தவிர அனைத்துச் சுட்டெண்களிலும் குறைவடைதல்களினால் தூண்டப்பட்டு முன்னைய மாதத்திலிருந்து 2.7 சுட்டெண் புள்ளிக்களைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 யூலையில் 41.4 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்தினைவிட 2022 யூலையில் புதிய கட்டளைகளில் வீழ்ச்சிக்கு குறிப்பாக, உணவு மற்றும் குடிபானம் தயாரிப்புத் துறையில் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் பிரதான காரணமாக அமைந்தது. நுகர்வோர் கொள்வனவு சக்தியில் சீர்குலைவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கடைக்குச் செல்லும் சில்லறைக் கொள்வனவாளர்கள் குறைவடைந்தமை என்பன குறைவடைந்த கேள்வி நிலைமைக்கான பிரதான காரணங்கள் மத்தியில் காணப்பட்டன. அதேவேளை, உணவு மற்றும் குடிபானத் தயாரிப்புத் துறையில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது இது, குறைவடைந்த கேள்வி நிலைமைகள் மற்றும் பொருட்கள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் போன்ற வழங்கல்பக்க கரிசனைகள் என்பவற்றின் ஒன்றிணைந்த பெறுபேறாகவிருந்தது. அமைய ஊழியர்கள் நிறுத்தப்பட்டமையினைப் பிரதான காரணமாகக் கொண்டு தொழில்நிலையும் குறிப்பாக, உணவு மற்றும் குடிபானத் தயாரிப்புத் துறையில் வீழ்ச்சியடைந்தது. எனினும், மாத காலப்பகுதியில் தாம் ஊழியர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு இயலுமாகவிருந்ததாக புடவை மற்றும் ஆடைத் துறையைச் சேர்ந்த பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றின் வீழ்ச்சிக்கமைவாகவும் அதேபோன்று உள்நாட்டுச் சந்தையில் தேவையானளவில் உள்ளீடுகள் கிடைக்கப்பெறாமை அத்துடன் பொருட்களை இறக்குமதி செய்வதில் இடர்பாடுகள் என்பவற்றின் பகுதியளவான காரணமாகவும் கொள்வனவுகளின் இருப்பு வீழ்ச்சியடைந்தது. மேலும், கப்பற் தாமதங்கள் மற்றும் டீசல் பற்றாக்குறை என்பவற்றினைப் பிரதான காரணமாகக் கொண்டு வழங்குநர் விநியோக நேரம் மாத காலப்பகுதியில் நீட்சியடைந்தது.


| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **44.1** | **41.4** | - | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 38.3 | 39.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 36.2 | 32.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 45.7 | 45.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 34.8 | 32.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 72.8 | 62.6 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வழங்கல் பக்க தடைகள் தொடர்ந்தமைக்கு மேலதிகமாக குறைவடைந்த கேள்வி நிலைமைகள் பற்றி தயாரிப்பாளர்கள் கரிசனை கொண்டிருந்தமையினால் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் எதிர்மறையான புலத்திலேயே காணப்பட்டது.

**தயாரிப்பு**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**41.4**

**2022 யூனுடன் ஒப்பிடுகையில் 2.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் யூனிலிருந்து 1.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 யூலையில் 51.1 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 யூலையில் இந்தியா, மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் இச்சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்தது. எனினும், யூரோ வலய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 யூலையில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 ஓகத்து 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2022 யூலையில் 43.0 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து தொடர்ச்சியாக நான்காவது மாதத்திற்கும் பணிகள் நடவடிக்கைகளில் சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளினால் தொடர்ச்சியான இச்சுருக்கமடைதல் தூண்டப்பட்டிருந்தது.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக போக்குவரத்து, உண்மைச் சொத்து மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட சீர்குலைதல்களுடன் 2022 யூனுடன் ஒப்பிடுகையில் 2022 யூலையில் மேலும் சுருக்கமடைந்தன.

மாத காலப்பகுதியில் எதிர்கொண்ட கடுமையான எரிபொருள் பற்றாக்குறைக்கு மத்தியில் அநேகமான துணைத் துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளுடன் தொழில் நடவடிக்கைகள் யூலையில் மேலும் குறைவடைந்தன. இதற்கு மேலதிகமாக, பல பதிலிறுப்பாளர்களால் தொடர்ச்சியாக எடுத்துக்காட்டப்பட்டமைக்கமைய நலிவடைந்த பொருளாதார நிலைமைகள், விலை உயர்வுகள் மற்றும் பயண மட்டுப்பாடுகள் மூலம் தூண்டப்பட்டு ஏனைய வழங்கல்பக்கத் தடைகளும் அதேபோன்று குறைவடைந்த கேள்வியும் பணிகள் துறையிலுள்ள தொழில்நடவடிக்கைகளை எதிர்மறையாகப் பாதித்தன. அதற்கமைய, போக்குவரத்து, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் அத்துடன் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மாத காலப்பகுதியில் கணிசமான சீர்குலைவுகளைப் பதிவுசெய்தன.

குறைவடைந்த தொழில் நடவடிக்கைகள், ஓய்வுபெறுதல்கள் மற்றும் பதவிவிலகல்கள் என்பவற்றுக்கு மத்தியில் புதிய ஆட்சேர்ப்புகளை நிறுத்துதல் மற்றும் ஏற்கனவேயுள்ள தொழில் ஒப்பந்தங்களை மீளப் புதுப்பிக்காமை என்பன காரணமாக தொழில்நிலை யூலையில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வழங்கல் பற்றாக்குறைகளுடன் விசேடமாக ஊழியர்கள் எதிர்கொண்ட எரிபொருள், போக்குவரத்து இடர்பாடுகள் மற்றும் மின்துண்டிப்புக்கள் என்பவற்றுடன் நிலுவையிலுள்ள பணிகள் மாத காலப்பகுதியில் மேலும் அதிகரித்தன.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **40.3** | **43.0** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 43.2 | 41.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 35.1 | 36.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 38.9 | 36.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 52.2 | 52.2 | = | அதிகரிக்கின்றது, சமமான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 32.3 | 48.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாட்டில் ஏற்பட்ட பல்வேறு வழங்கல்பக்க நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் நிறுவனங்கள் தொடர்ச்சியாக போராடியமை காரணமாக அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் குறைவான வேகத்திலேனும் பலவீனமடைந்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 43.0**

**2022 யூனுடன் ஒப்பிடுகையில் 2.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*உலகத் தோற்றப்பாடு:*
*பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 யூனில் 53.9 இலிருந்து 2022 யூலையில் 51.1 இனைப் பதிவுசெய்து, உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் விரிவடைதலைக் காண்பிக்கின்றது.

சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 யூலையில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்த அதேவேளை ஐக்கிய அமெரிக்காவின் இச்சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2022 ஓகத்து 14இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.